# வேற்றுமை உருபுகள்

க.காளிமுத்து
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*பாரதியார் பல்கலைக்கழகம், கோவை - 046.*

**முன்னுரை:**

சங்ககால வாழ்க்கை முறை வீரம் அறம் போன்றவைகளை கொண்டு செல்லுகின்றது இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. மக்களின் உணவு, தொழில், பழக்க வழக்கங்கள், பொழுதுபோக்குகள், மனப்பாங்கு, சமய நம்பிக்கை ஆகிய அனைத்தும் அவர்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப அமைந்து விளங்கியமை காண்கிறோம். என்று டாக்டர் ஆ இராமகிருட்டினன் கூறுகின்றார் தொல்காப்பியர் கூறிய வேற்றுமைச் சிந்தனைகளை புறப்பாடல்களில் பயின்று வாழும் உருபுகளின் தனிச்சிறப்புகளை காணலாம்.

ஐ, ஒடு, கு, இன், அது, கண் விளியென்று அதனை ஈண்டுரைப்பின் வேற்றுமை எட்டாகும் உண்டவை தாம் ஏற்ற பொருள் செய்யிடத்து என்றும் இதன் மூலம் பெயரும். முறையும் தொகையும் அவை தாமே வேற்றுமைகளில் பெயர் வேற்றுமையின் பின் பெயர் ஒழிந்து ஏழும் தமக்கேற்ற பொருட்டாக வரும் என்று குணவிர பண்டிதர் கூறுகின்றார். உருபுகளின் பொருளின் ஆளுமைகளை உணர்த்துகின்றார் ஒவ்வொரு உருபுகளும் தனிச்சிறப்புகளை பெற்றுள்ளது.

”வேற்றுமை என்ற சொல்லிற்கு இலக்கண வழக்கில் பொருள் வரித்துறைக்கும் வேறுபடுதலால் வேற்றுமை எனவும் வேறுபடுத்துவதால் வேற்றுமை எனவும், கூறுவதுடன் வேற்றுமைப் பொருளைத் தருதலால் வேற்றுமையின் தனித்தன்மை வெளிப்படுத்துகின்றது. என்ற பார்த்தசாரதி கூறுகின்றார் பின்வரும் புறப்பாடல்களின் உருபுகளை காணலாம்.

**இரண்டாம் வேற்றுமை “ஐ” உருபு**

**”இரண்டா குவதே**
**ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி**
**எவ்வழி வரினும் வினையே, வினைக்குறிப்பு**
**இவ் இரு முதலில் தோன்றும்”** -1

தெரிநிலை வினையாகவும், குறிப்பு வினையாகவும் “ஐ” உருபுகளை சிறப்பாக உணர்த்திக் நிற்கும் செயப்படுபொருளாக மாற்றுவதே இதன் சிறப்பாகும்.

**“ஐ” உருபின் பாகுபாடுகள்**

**“காப்பின், ஒப்பின், ஊர்தியின், இழையின்**
**ஒப்பின், புகழின், பழியின், என்றா**
**பெறலின், இழவின், காதலின், வெகுளியின்**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

**செறலின், உறுத்தலின், கற்பின் என்றா**

**அறுத்தலின், குறைத்தலின், தொகுத்தலின், பிரித்தலின்**

**நிறுத்தலின், அளவின், எண்ணின் என்றா**

**ஆக்கலின், சார்தலின், செலவின் கன்றலின்**

**நோக்கலின், அஞ்சலின், சிதைப்பின், என்றா**

**அன்ன பிறவும் அம்முதற் பொருள**

**என்ன கிளவியும் அதன்பால என்மனார்"** -2

1. காப்பு, 2.ஊர்தி,3. ஒப்பு,

4. இழை, 5. ஒப்பு, 6. புகழ்,

7. பழி, 8. பெறல், 9. இழவு,

10.காதல், 11. வெகுளி, 12. செறல்,

13. உவத்தல், 14. கற்பி,15. அறுத்தல்,

16.குறைத்தல், 17. தொகுத்தல்,18.பிரித்தல்,

19.நிறுத்தல்,20.அளவு, 21.எண்ஆக்கல்,

23.சார்தல், 24.செலவு, 25.கன்றல்,

26.நோக்கல், 27.அஞ்சல்,28.சிதைப்பு.

இரண்டாம் வேற்றுமை உருபுகள் இதன்கண் பயின்று வந்து பொருளை உணர்த்து என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார்.

**இரண்டாம் உருபு**

**"கோதை மார்பிள் கோதை யானும்**
**கோதையைப் புணர்ந்தோர் தோதையானும்"** -3

வேந்தன் மார்பில் அணிந்த மாலையை புணர்ந்த மகளிர் அணிந்த மாலையும் வாசம் கமழும் சிறப்புமிக்க தொண்டி நாட்டின் தலைவன் உன்னுடைய வறுமையை போக்கக் கூடிய ஆற்றல் இவனிடம் உள்ளது. அதனால் உனக்கு நல்வழிக் காட்டிய என்னையும் சேர்த்து மன்னிடம் சொல்வாயாக என்று இரவலனே ஆற்றுப்படுத்துவதாக அமைகின்றது. சிறப்புமிக்க வேந்தனை சேரமான் கோக்கோதை மார்பினை பொய்கையார் மனமுகர்ந்து பாடுகின்றார்.

**"இன்னே சென்மதி நீயே சென்று அவன்**
**பகைப்புலம் படரா அளவை நின்**
**பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே"** -4

வளமை பொருந்திய மறவர் வீட்டிற்குக் அருகில் விளாமரத்தின் விதைகளை இளங்கன்றுகளையுடைய யானைகள் போட்டி போட்டுகொண்டு உண்ணும் இப்படியிருக்கின்ற செல்வ செழிப்புமிக்க வல்லூர் நாட்டை உன்னுடைய சுற்றத்தார் சென்று அவன் பகை வெல்ல போகும் முன் உன் வறுமையை அடுத்துச்சொல்லி பரிசில் பெற்றுக்கொள்வதற்கு வழிகளை காட்டினை சிறப்பாகும் என்று வல்லூர் கிழானை கருந்தும்பியார் புகழ்ந்து பாடுகின்றார்.

**"உண்ணா மருங்குல் காட்டித் தன் ஊர்க்**
**கருங்கைக் கொல்லனை இரக்கும்**
**திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே"** -5

இரவும் பகலும் பராமல் தன்னை நாடி வருபவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுக்கும் கரம் உடையவன் போரில் வெற்றி பெற்று அவனுடைய உடம்பில் வீரத்தழும்பு எண்ணற்றவை காணப்படும் பசியால் வாடி பரிசில் பெற வரும் பாணர்க்கு வேண்டியவைகளை செய்யும் ஆற்றல் உடையவன் அவன் பசிக்கு பகைவன் என்ற எண்ணத்தில் உறுதியுடையவன். அதனால் நீயும் உன் சுற்றத்தாரும் சென்று அவனிடம் யாசிக்கும்போது கரிய நிறமுடைய கொல்லனை நிறைய வேல் வடித்து தரச் சொல்லுவான் இப்படி உயர்ந்த பண்புகளோடு காணப்படும்.

**"எருமை அன்ன கருங்கல் இடை**
**அன்பை கொண்டு அருள் செய்கின்ற**
**மனமுடையவன் உம்முடைய நாடு"** -6

வளமான காடுகளில் கருமையான கற்களை போல பசுக்கூட்டம் பரந்து மேய்வது போல் யானைக்கூட்டம் நிறைந்து காணப்படுகின்ற செல்வ வளமிக்க நாட்டில் ஆட்சிசெய்கின்ற கோப் பெருஞ்சோலிரும் பொறை அன்பை கொண்டு அருள் செய்கின்ற மனமுடையவன் என்று நடுவெரூஉத் தலையார் புகழ்ந்து பாடுகின்றார்.

**"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**
**பலரும் வருவர் பரிசில் மாக்கள்**
**வரிசை அறிதலோ அரிதே பெரிதும்"** -7

வற்றாத வளமும் பொருந்திய அரசனே நான்கு திசைகளிலிருந்து கொடை வள்ளல் ஒருவனை நினைத்து பலரும் வருவார்கள் அவர்களுடைய வரிசை அறிந்து பரிசில் தரக்கூடாது புலமையறிந்து பொருட்களை கொடுக்க வேண்டும். பொதுவாக நினைக்க கூடிய எண்ணத்தை தவிர்பாயாக என்று திருமுடிக்காரிக்கு கபிலர் புகழ்ந்து பாடுகின்றார்.ஐ வேற்றுமை உருபு எல்லா இடங்களில் வெளிப்படையாக வருவதில்லை உயர்திணைச் சொற்களில் பொதுவாக இவை வெளிப்படையாக வரும் அறிணைச் சொற்களில் வரையறைச் சொற்களுடன் வரும் என்றார் ச.அகத்தியலிங்கம் கூறுகின்றார்.

**"பணைகெழு வேந்தரை இறந்தும்**
**இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே"** -8

கார்காலத்தில் தெறுழ் மலர்கள் அடர்ந்து யானையின் மேலே படர்ந்து காணப்படும் மழைக்காலங்களில் புற்றிலிருந்து வரும் ஈசலை பிடித்து இனிய மோரோடு சேர்த்து புளிக்கறியும் தருவாய் தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று கூறாமல் வாரி வழங்கும் கொடை வள்ளல் பாரி. முரசு கொட்டி வெற்றி சிறப்பு பாடும் வேந்தரை இன்றைக்கு இல்லையே பறம்பு நாடு அழிந்துவிடும் என்று வருந்திய நிலையோடு கபிலர் பாடுகின்றார்.

**பதிற்றுப்பத்து**

**"திறை கொண்டு பெயர்தி வாழ்க நின் ஊழி**
**உரவரும் மடவரும் அறிவு தெரிந்த எண்ணி**
**அறிந்தனை அருளாய் ஆயின்"** -9

பகைவர்கள் உம்முடைய வீரத்தை கண்டு பயந்து திறைபொருளை செலுத்துவார்கள் உனக்கு முன்பு ஆட்சிசெய்த செல்வம் இன்னும் குறையாமல் காத்து வருகின்றாய் உன்னை தெய்வமென்று போற்று அளவுக்கு சிறப்புடைதாய் ஆட்சி சிறப்புகள் செயல்படுகின்றன. தெய்வத்தால் பெற்ற ஆயும் காலம் சிறப்புடன் வாழ்வாயாக. வறுமையால் உன்னை நாடி வருபவர்களுக்கு அறிவுடையோர், அறிவில்லாதவர் என்று அறிந்தனை நீ அறிந்து அருள்வாய் அப்படியில்லை என்றால் இவ்வுலகத்தில் நிலைத்து வாழ்பவர்கள் யார் என்று கூறுவாயாக. என்று அரிசில்கிழார் தகடுர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் சிறப்புகளை பாடியுள்ளார்.

**"மாய வண்ணனை மனை உறப் பெற்று அவற்கு**
**ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்து**
**புரோசு மயக்கி"** -10

வளமிக்க நாட்டில் பல ஊர்களை தோற்றுவித்து ஆட்சி புரிந்த மன்னன். மதம் கொண்ட யானை போல் போர்புரிந்து பகைவர்களை விரட்டியடித்தவன் பல சேனைகளை கொண்டு பகைவர் அச்சம் கொள்ளுமாறு செயல்புரிந்தான் செய்து

சிறப்புடைய பலவேள்விகளை அறச்செயல்களை முழுமையாக செய்து முடித்தான். கரிய நிறத்தோடு காட்சியளிக்கும் திருமாலை தன் மனத்தின் பொருந்த பெற்றவன். ஒத்திர நெல்வகை ஒன்றை எடுத்துகொண்டு தேவதானமாக கொடுத்து புகழ்பெற்றான். என்று செல்வக் வாழியாதன கபிலர் புகழ்ந்து பாடுகின்றார்.

**"பல்வேல் தானை அதிகமானோடு**
**இருபெரு வேந்தரையும் உடல்நிலை வென்று**
**முரசும் குடையும் கலனனும் கொண்டு"** -11

பகைவர்களை அச்சமுறுத்தும் வகையில் போர் பல செய்து வெற்றிக் கண்டவன் அவன் கொல்லிமலையில் தனது ஆட்சிசெய்து கொண்டியிருக்கும் பல வேற்படைகளை கொண்டு அதிகமான் மற்றும் சோழர் பாண்டியர் ஆகிய இருவேந்தரையும் வென்றாய் அதனால் முரசுகளையும், வெற்றிபெற்ற குடைகளையும் கொண்ல வேள்வி செய்து அதிக வலிமையுடைவன் என்று அரிசில்கிழார் புகழ்ந்துபாடுகின்றார்.

**பத்துப்பாட்டு நூல்கள்**

**"மலர்ந்த மார்பினை"**

சிறிய யாழில் நரம்பு வரிசையாக இறுக கட்டிக்கொண்டு இனிய இசைகளை கொடுக்கும் இயல்புடையது. ஐம்பெருங் பகைவர்களுக்கு வெற்றி கைகளை நீட்டி காண்பித்தாய் பகைவீரர்கள் எறிவதற்கு ஏதுவாக உம்முடைய மார்பினை காட்டினாய் நிமிர்ந்த செங்கோலைக் கொண்டு ஆட்சி செய்து நீதியை நிலைநாட்டினாய். தம் புகழை பாடி பாணர்களுக்கு பரிசில் தரும் இயல்புடைவன் ஒய்மா நாட்டு நல்லிக்கோடனை புகழ்ந்து நல்லூர் நத்தனார் பாடுகின்றார்.

இரண்டாம் வேற்றுமை உருபு "ஐ" தொல்காப்பியர் இருபத்தியெட்டு பொருட்பாகுபாடுகளை கூறுகின்றார். இதன் அடிப்படையில் உருபுகள் பொருளை பெற்று சிறப்பாக பயின்று வரும் சங்க புறநூல்களில் புகழ், பெறல்,


© 2023, IRJTSR

காதல், நோக்கல் போன்றவைகள் பொருள் அடிப்படையில் தொல்காப்பியர் சிந்தனைகளுக்கு கேற்றப்படி பயின்று வந்துள்ளன. தொல்காப்பியர் கூறாத பொருட்பாகுகள் கருவி, ஊடல், அழித்தல், இதன் அடிப்படையில் சங்க புறநூல்களில் பயின்று வந்துள்ளதை புலவர்கள் பாடிய பாடல் வழியால் அறிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியர் காலத்தில் தோன்றிய பொருட்பாடுகள் தோன்றியும், மறைந்தும் காலத்திற்கேற்றபடி வளர்ச்சிப் பெற்றுள்ளது என்பதை புறநூல்கள் வழியாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

**முடிவுரை:**

கருவி, உடல், அழித்தல் போன்றவைகளில் பயின்று வந்துள்ளது தொல்காப்பியன் கூறாத வேற்றுமை உருபுகளாகும்.

மூன்றாம் உருபு: போர் அன்பு கொடை, தொகுத்தல், நீக்கம், சிறப்பு சேர்தல், செல்லல், கழறல், கொள்ளல், வருத்தம், துணிவு, ஆற்றல், அச்சம் போன்றவகையில் தொல்காப்பியர் கூறாத வேற்றுமைப் பாகுபாடுகளாகும்.

நான்காம் வேற்றுமை உருபுகள்: சிறப்பு, அருள், பகை, அச்சம், போன்ற அடிப்படையில் தொல்காப்பியர் கூறாத பொருட்களில் வருகின்றன.

ஐந்தாம் வேற்றுமை உருபுகள்: விரைவு, மாலை, தொன்மை, கடமை, செலவு, அணிதல், போன்றவைகளை அடிப்படையாக கொண்டு பொருட்களை உணர்த்துகின்றது.

ஆறாம் உருபுகள்: மாறுதல், புனைவு, காதல், சிறப்பு போன்ற அடிப்படையில் தொல்காப்பியர் கூறாத உருபுகளாகும்.

ஏழாம்கண்: கிளை, பறித்தல், போன்றவைகளை மையமாக கொண்டு பொருளைஉணர்த்துகின்றனது.

- நான்காம் வேற்றுமை உருபுகள்: சிறப்பு, அருள், பகை, அச்சம், போன்ற அடிப்படையில் தொல்காப்பியர் கூறாத பொருட்களில் வருகின்றன.
- ஐந்தாம் வேற்றுமை உருபுகள்: விரைவு, மாலை, தொன்மை, கடமை, செலவு, அணிதல், போன்றவைகளை அடிப்படையாக கொண்டு பொருட்களை உணர்த்துகின்றது.
- ஆறாம் உருபுகள்: மாறுதல், புனைவு, காதல், சிறப்பு போன்ற அடிப்படையில் தொல்காப்பியர் கூறாத உருபுகளாகும்.
- ஏழாம்கண்: கிளை, பறித்தல், போன்றவைகளை மையமாக கொண்டு பொருளைஉணர்த்துகின்றனது.



© 2023, IRJTSR 

**அடிக்குறிப்புகள்:**

1. தொல்-(சொல்) திருநானசம்பந்தர், பக்.46
2. தொல் (சொல்) திருஞானசம்மந்தர், பக்.46
3. புறம் மாணிக்கவாசகன், பக்:51
4. புறம் மாணிக்கவாசகன், பக்.53
5. புறம் மாணிக்கவாசகன், பக்.55
6. புறம் மாணிக்கவாசகன், பக்.60
7. புறம் மாணிக்கவாசகன், பக்.61.
8. புறம் மாணிக்கவாசகன், பக்.62
9. புறம் மாணிக்கவாசகன், பக்.246
10. புறம் மாணிக்கவாசகன், பக்.248
11. புறம் மாணிக்கவாசகன், பக்.230.

**பார்வை நூல்கள்:**

1. சோம இளவரசு - இலக்கண வரலாறு
2. இரா.இளங்குமரன் - இலக்கண வரலாறு
3. தொல்காப்பியம் (சொல்) - சேனாவரையர்
4. தொல்காப்பியம் (சொல்) - இளம்பூரணர்